உ

சிவமயம்.

வாட்போக்கிக்கலம்பகம்.

இஃது

கைலாயபரம்பரை
வேதாகம சித்தாந்தசமயாசாரிய பீடமாய்
விளங்காநின்ற திருவாவடுதுறை ஆதீனவித்துவான்
திரிசிரபுரம்
மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால்
செய்யப்பட்டது.

இது

இந்நூலாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய
தில்லைவிடங்கன் வித்வான்
வெண்பாப்புலி,
சு. வேலுசாமிப்பிள்ளையவர்களால்
முன்பிரதிக்கிணங்கப்பரிசோதித்து,

திரிசிரபுரம்
தி. சபாபதிபிள்ளையவர்களாற்றமது
ஸ்ரீமட்டுவார்குழலம்பாள்
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.
1889

இத்துடன் நல்லகாகித மெழுத்துடன்

அச்சிட்டபுஸ்தகங்கள்.

ஒருதுறைகோவை
கோடீச்சுரகோவை
சிவதருமோத்திரம்
நளவெண்பா
உவமானசங்கிரகம்
இரத்தினசுருக்கம்
சித்தியார் ௬ பேர்களுரை
செவ்வந்திப்புராணம்

38/5

சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் மாணக்கருளொருவரும்
திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை
ஆதீனத்துச் சீஷருமாகிய தில்லைவிடங்கன் வித்வான்
வெண்பாப்புலி,
சு. வேலுசாமிப்பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பூமேவு கங்கைமுதற் புனிதமா நதிகடன்பாற் புரிவிற் ரோய்ந்து, தாமேவு பவமிரியத் தனிவரம்பெற் றுயர்பொன்னி தனது தென்சார், மாமேவு மரதகமா மலையிலிமை யவர்தினமு மகிழ்ந்துபோற்றக், கோமேவு மலர்ச்சுரும்பார் குழலொடம ரிராசலிங்கர் குதூகுலிக்க. (க)

பன்னியநான் மறையுணராப் பழம்பொருளி னிலக்கணமும் பகர்தற்கொண்ணு, நன்னியம நெறியினரு ணாட்டமுறு மிலக்கியு நயப்பிற் காட்டித், துன்னியசெஞ் சொற்சுவையுஞ் சுகந்தருநற் பொருட்சுவையுந் துலங்கச்சேர்த்தி, மன்னியநாவலர்புகழ வாட்போக்கிக் கலம்பகநூல் வகுத்தான் மன்னோ.

முன்னூல்செய் தவர்தம்முண் மூன்வருவெண் பாவாதி முறைய தாகப், பன்னூலி லொவ்வொருவர் படுத்துவமூற் று

ளெனவே பரவா நிற்பர், எந்நூல்செய் யப்புகினு மிந்நூலுக்
கிணையிலையென் றெவருங்கூறப், பன்னூல்செய் துயர்புகழா
ன் பரமனையே யருச்சிக்கும் பரிவின்மிக்கான். (௩)

சாதியா லிழிந்தவர்க்குஞ் சமயத்தா லொழிந்தவர்க்குந்
தன்னமேனும், பேதியா தருள்சுரந்து பெட்புறுநூற் பொரு
ளுணர்ந்து பிறங்க நாளும், போதியா நின்றருளும் புண்ணிய
வான் கற்பவர்க்குப் புரிதாய்தந்தை,யாதியார் தமிலெண்மடங்
கார்வத்தா னவன்சுகுண மறைவார்யாரோ. (௪)

மேனாட்சிற் றறிவுடையேன் றன்னையுந்தன் மாணவர்கண்
மேவுங்கல்வி, மானாட்சி பெறுங்கழகத் திருத்தியருங் கலை
பயிற்றி மன்னுஞ்சங்கந், தானாட்சி தரச்செய்தோன் சிரகிரி
போ லெனதுளமாந் தலத்தினனாய், வானாட்சி கொண்டருள்
சீர் மீனாட்சி சுந்தரநா வலவரோரே. (௫)

இந்நூலாசிரியரிடத்திற் கல்விபயின்ற மாணாக்கர்களுடைய

அபிதானவிளக்கம்.

திருவாவடுதுறையாதீனம். உ-வது. பட்டம்நமசிவாயதேசிகர்

குமாரசுவாமிசுவாமிகள்

நமசிவாயசுவாமிகள்

சிற்றம்பலசுவாமிகள்

பழனிக்குமாரசுவாமிகள்

38/5

	இராமலிங்கசுவாமிகள்
	ஆறுமுகசுவாமிகள்முதலிய
	சுவாமிகள்.
திரிசிரபுரம்.	தியாகராஜசெட்டியார்
	தெய்வநாயகம்பிள்ளை
	சதாசிவம்பிள்ளை
	சுப்பராயசெட்டியார்
கொட்டையூர்.	சாமிநாததேசிகர்
வல்லூர்.	தேவராசம்பிள்ளை
திருப்பாதிரிப்புலியூர்.	சிவசிதம்பரமுதலியார்
உத்தமதானபுரம்.	சாமிநாதையர்
திருக்குற்றாலம்.	செண்பகக்குற்றாலங்கவிராயர்
விக்கிரமசிங்கபுரம்.	அனந்தகிஷ்ணகவிராயர்
திருவழுந்தூர்.	சாமிநாதக்கவிராயர்
மாயூரம்.	முத்துசாமிபிள்ளை
கூறைநாடு.	சபாபதிஐயர்
	சிவப்பிரகாசையர்
அரித்துவாரமங்கலம்.	சோமசுந்தரதேசிகர்
திருவிடைமருதூர்.	சாமிநாததேசிகர்
தஞ்சாவூர்.	ஐயாசாமிபிள்ளை
மாயூரம்.	வேதநாயகம்பிள்ளை
காரைக்கால்.	சவரிநாதம்பிள்ளை

சிதம்பரம். முருகப்பட்டாரகர்
சீயாலம். சிவசிதம்பரம்பிள்ளை

முதலியவர்கள் எனக்குத்தெரிந்தவர்கள்.

மாதக்கணக்கில் படித்தவரொண்ணிலர்.

மேற்கண்டவர்களு ளடங்கிய நூற்றுப்பத்தவதானி யார் ஷையாசிரியரிடத்திற்சுமார் அ௰-வருடங்கட்கு முன் படித்தவராதலாற் பின்படித்தவரின்னின்னாரெனத் தெரியாமையால் அவருக்கும் மற்றவருக்கும் புலப்படும்படி:

இவண்எடுத்துக்காட்டப்பட்டது.

இந்நூலாசிரியரியற்றிய நூற்பெயரட்டவணை.

காழிக்கோவை,
திருவிடைமருதூருலா
திருவானைக்காவகிலாண்டவம்மைபிள்ளைத்தமிழ்
திருத்தவத்துறைப் பெருந்தவப்பிராட்டிபிள்ளைத்தமிழ்
திருவுறந்தைக் காந்திமதியம்மைபிள்ளைத்தமிழ்
திருப்பெருமண நல்லூர்த்திருநீற்றுமைபிள்ளைத்தமிழ்
திருக்குடந்தை மங்களாம்பிகைபிள்ளைத்தமிழ்
கன்னபுரப்பாகம்பிரியாள்பிள்ளைத்தமிழ்
திருவெண்காட்டுப் பெரியநாயகியம்மைபிள்ளைத்தமிழ்
திருவிடைக்கழி முருகர்பிள்ளைத்தமிழ்

திருவாவடுதுறை யம்பலவாணதேசிகர்பிள்ளைத்தமிழ்
சேக்கிழார்சுவாமிகள் பிள்ளைத்தமிழ்
வாட்போக்கிக்கலம்பகம்
துறைசைக்கலம்பகம்
திருத்தில்லையமகவந்தாதி
திருத்துறைசையமகவந்தாதி
திருச்சிராப்பள்ளியமகவந்தாதி
திருக்குடந்தைத்திரிபந்தாதி
திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி
திருவானைக்காத்திரிபந்தாதி
திருவிடைமருதூர்த்திரிபந்தாதி
பட்டீச்சரப்பதிற்றுப்பத்தந்தாதி
பூவாளூர்ப்பதிற்றுப்பத்தந்தாதி
பாலைவனப்பதிற்றுப்பத்தந்தாதி
திருவூறைப்பதிற்றுப்பத்தந்தாதி
தண்டபாணிபதிற்றுப்பத்தந்தாதி
திருஞானசம்பந்தர்பதிற்றுபத்தந்தாதி
எறும்பீச்சரம்வெண்பாவந்தாதி
திருக்கலைசைமாலை
திருவானைக்காமாலை
திருவாவடுதுறைச் சுப்பிரமணியதேசிகர்மாலை
தருமைச்சச்சிதானந்ததேசிகர்மாலை
திருஞானசம்பந்தரானந்தக்களிப்பு

திருவுறந்தைப்புராணம்,
திருக்குடந்தைப்புராணம்
மாயூரப்புராணம்
திருத்துருத்திப்புராணம்
திருக்குறுக்கைவீரட்டப்புராணம்
திருவாளொளிபுற்றூர்ப்புராணம்
திருநாகைக்காரோணப்புராணம
விளத்தொட்டிப்புராணம்
ஆற்றூர்ப்புராணம்
திருவாரூர்த்தியாகராசர்லீலை
தனியூர்ப்புராணம்
மண்ணிப்படிக்கரைப்புராணம்
கோயிலூர்ப்புராணம்
கண்டதேவிப்புராணம்
குறைக்குடிப்புராணம்
வீழாவனப்புராணம்
திருமயிலைப்புராணம்
காசிரகசியம்
திருவம்பர்ப்புராணம்
திருப்பெருந்துறைப்புராணம்
பதிகங்கள்பல
தனிப்பாடல்கள்எண்ணிறந்தன.

சிவமயம்.

வாட்போக்கிக்கலம்பகம்.

பாயிரம்.

விநாயகர் துதி.

கட்டளைக்கலித்துறை.

முக்க ணொருத்தன்மற் றென்னுள வாரி முயங்குதலான்
மிக்கவெண் கோடொன்று மேசிதை யாகிற்கும் வெள்ளறிவை
யுக்க கருமத மேகரு மாசை யொழிக்குமருள்
புக்கசெம் மேனி மனஞ்செம்மை யாகப் புணர்த்திடுமே. (க)

நால்வர் துதி.

கட்டளைக்கலித்துறை.

சொல்லார் புவியி னெடுமறை யாதித் தொகையுணர்ந்த
வல்லார் மலமொன் றறுமே யடித்தொண்டு வாய்ந்தொளிரு
நல்லா ரிணக்கத்தி னென்பா ரதுநிற்க நால்வரையு
மெல்லா மலமு மறக்கூடு வேனின் மெளிதுறுமே. (உ)

பாயிர முற்றிற்று.

ஒருபோகு-மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

எட்டடித்தரவு-உ

மாமேவு செங்கமல மலருறையுந் திருமகளும்
பூமேவு வெண்கமலப் பொகுட்டுறையுங் கலைமகளும்
பிரியாமே யெஞ்ஞான்றும் பெருநட்புக் கொண்டுறையச்
சரியாமே புகழோங்கத் தழைந்துவளர் சோணாட்டில்
வரைக்கருஞ்சந் தனக்குறடு மால்யானைக் கோடுகளும் (பாற்
றிரைக்கரத்தி னெடுத்தெறியுஞ் செழும்பொன்னி நதித்தென்
றனியவிரும் வாட்போக்கித் தடங்கிரிமேற் பேரருளா
வினியசுரும் பார்குழலோ டியைந்துறையு மருமருந்தே. (க)

குப்பாயங் கொடுப்பவனே கொழுங்கண்மல ரிடுபவனே
செப்பாய முலையுமைபாய்த் திகழ்ந்திடப்பா லுறைபவனே
வெருவாழி கொள்பவனே விரலாழி கொடுப்பவனே
மருவாழி யென்றுணாக்கு மடைப்பள்ளி காப்பவனே
கையம்பா யெழுபவனே கருமுகிலாய்ச் சுமப்பவனே
வையம்பாய் வெள்விடையாய் வண்கொடியா யுறுபவனே
தேராவோர் மனையாளைச் சேர்ப்பவனே நெடுமாலென்
றேராவோர் புலவரொலா முவந்தேத்தப் பொலிவோய்கேள்.

ஈரடித் தாழிசைகள்-சு:

அடித்தழும்பு புறத்திருக்க வாரியர்கோ மகன்கொடுத்த
முடித்தழும்புங் கொண்டனைவெம் முலைத்தழும்பிற் சிரியதோ
அருகாக முப்புவன மடங்கவெரித் தருளுகினைக்
கொருகாக மெரித்தனையென் றுரைப்பதுமோர் புகழாமோ ()

சீரியர்கைப்புனல்கொல்லோ திருந்துமைகைப்புனன்முடிமே
லாரியர்கைப் புனல்கொள்வா யடங்கநனைத் திடுங்கொல்லோ
தருநிதிக்கோ விருக்கவொரு சார்வணிகரொடுகலந்தாய்
பெருநிதிக்கோ வெனிற்பெருமான் பேராசை பெரிதன்றே ()
தொடிமுழங்க மணியொலித்துத்துணைவிபுரிபூசைகொலோ
விடிமுழங்கப் புரிபூசை யெஞ்ஞான்று மினிதுவப்பாய் (௫)
உனையடைந்தார் பயமகன்றின் புறுவனொனற் கணியுரகங்
கனையடைந்த விடிநோக்கிக் களித்துறைதல் கரியன்றே. (௬)

ஈரடி அராகம்-௪.

அவனவ ளதுவென வறைதரு வகைமையு
னிவனிவ ளிதுவென வியைதர லருமையை (௧)
அருவமு முருவமு மருவமோ டுருவமு
மொருவற வுளையெனி னிலையென வொளிருவை (௨)
இதுவலை யதுவலை யுதுவலை யெதுவென
முதுமறை கதறவு மதன்முடி மருவுவை (௩)
இருளென நிலவென வெழுதரு கதிரென
வருளுயி ருறுதர மணிதர நிலவுவை. (௪)

பெயர்த்தும் வந்த ஈரடித்தாழிசைகள்-௬.

அருநாம மெனச்சொலுநின் னுயிரநா மத்துளொரு
திருநாமங் கூற்றடுநின் றிருவடிதாக் குதன்மிகையே (௧)
பிரமநீ யெனவழுதி பிரம்படியே யுணர்த்தியது
சிரமம்வே தாகமங்கள் செப்புதனின் றிருவாய்க்கே (௨)

உள்வாரு ளொருவரோ யொருகோடிக் கமைந்துறவுங்
கள்வாரோ வுடைக்கோவைக் காயவிழி மலர்த்தியதென் (௩)
கண்டவிட ஙித்தியத்தைக் காட்டவுங்கள் காளமுத
லண்டவிடந் தரவைத்தா யம்புயஞ்செய் குற்றமெவன் (௪)
ஓருங்கருவி வளைஙிகர்சோ வொருங்கெரிக்கு நகையிருக்கப்
பெருங்கருவி பலகொண்டாய் பித்தனெனல் விளக்கினையோ
ஓரொழுத்துக் குரியபொரு ளொருநெடுமா லயனென்பார்
நீரொழுத்து ஙிகர்மொழிஙின் னிலவிதழி முன்னெவனும். (௫)

நாற்சீரீரடி யம்போதரங்கம்-௨.

துருவொரு தலையினைந் தொழிலி யற்றியு
மருவொரு தொழிலுமில் லாத மாட்சியை. (௧)
பெண்ணொரு பாலுறு பெற்றி மேவியு
மெண்ணொரு விகாரமு மிலாத காட்சியை. (௨)

நாற்சீரோரடி யம்போதரங்கம்-௪.

உள்ளொளி யாகிஙின் றுணர்த்துந் தன்மையை (௧)
வெள்ளொளி விடைமிசை விளங்கு நன்மையை (௨)
அம்பல நடுப்புகுந் தாடுங் கூத்தினை (௩)
ஙம்பல மெனப்பவர் நவிலுஞ் சோத்தினை. (௪)

முச்சீரோரடி யம்போதரங்கம்-அ.

சடை நெடு முடியமர் செல்வினை (௧)
தவமுயல் பவர்வினை கல்வினை (௨)
கடையரு வடவனா வில்வினை (௩)

கவினுற நெடுமறை சொல்லினை (ச)
மிடைவலி யினர்தரு பல்லினை (ரு)
விசயனொ டெதிர்பொரு மல்லினை (சா)
அடைதரு மிடையதள் புல்லினை (எ)
அளவிட லரியதோ ரொல்லினை. (அ)

இருசீர்ஓரடி யம்போதரங்கம்-கசா.

அருள்கொ டுத்தனை, யிருள்கெ டுத்தனை (உ)
ஆல மாந்தினை, சூல மேந்தினை (ச)
இசைவி ரித்தனை, வசையி ரித்தனை (சா)
யெங்கு நீடினை, சங்கு சூடினை (அ)
மதிய ணிந்தனை, கொதித ணிந்தனை (கo)
மழுவ லத்தினை, தொழுந லத்தினை (கஉ)
பொருவி றந்தனை, கருவ றந்தனை (கச)
பொய்யி னீங்கினை, மெய்யி னோங்கினை. (கசா)

தனிச்சொல்.

என வாங்கு,

பதினேந்தடி நேரிசையாசிரியச் சுரிதகம்.

பசித்தழூஉ ஞானப் பாலுண் மழவு
மேற்றொரு சூல மேற்றதோ ளரசு
மவிர்தரு செம்பொ னற்றிடை யிட்டுக்
குளத்தி லெடுத்துக் கொண்ட கோவுங்
கனவினு மமரர் காணரு மின்னைப்
பரிமா மிசைவரப் பண்ணிய முதலுங்

கனாதரு தமிழ்க்குக் காணி கொடுத்த
நின்றிருச் செவிக்கண் ணெறிகுறித் தறியாப்
பொல்லாப் புலைத்தொழிற் கல்லாச் சிறியே
னெவ்வகைப் பற்று மிரித்தவர்க் கன்றி
மற்றையர்க் கொல்லா வயங்கருள் பெறுவான்
கொடுவிட மமுதாக் கொண்டதை யுணர்ந்து
குற்றமுங் குணமாக் கொள்வையென் றெண்ணிப்
புன்மொழித் துதிசில புகட்டின
னன்மொழி யெனினு மருளுதி வினாந்தே. (க)

நேரிசைவெண்பா.

வினாகமழ்பூங் கொன்றைமுடி வேய்ந்துவாட் போக்கி
வனாகமழ வீற்றிருக்கும் வள்ள-லுனாகமழ்பொற்
பாத கமலம் படுமுடியார்க் கப்பொழுதே
பாத கமலம் படும். (உ)

கட்டளைக்கலித்துறை.

படர்பா தலம்பொற் கனத்தக டாமப் பசுந்தகட்டு
ளடர்பாய் புவிமென் னிறத்தக டாமதன் மேலழுத்துந்
தொடர்பாய செம்மணி வாட்போக்கி வெற்பதிற் றோன் றுசுட
ரிடர்பா ரகம்விண் ணகமோவ வாங்குறை யெம்மிறையே. (ந)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இறைவர்திரு வாட்போக்கி யுறைபவர்தா மாடுபுன லிரு
ம்பார் வீழ்ந்து, துறைகொளமுன் கவிழ்த்தவொரு காகத்தை
முனியாராய்த் தூய தீம்பா, லுறைபடரக் கவிழ்த்தவொரு கா

கத்தை முனிந்தனர்பா லவாவா லென்னி, லுறைசெறிபா லா
ழியிற்றீ வாய்க்கணையைக் கிடத்தினர்க்கஃ துண்டா மன்றே.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியச்சந்தவிருத்தம்.

தந்த தனதன தந்த தனதன தந்த தனதனனு.

அன்று வருவிட மென்று கருதவ ழன்று மதியெழும்வே
யொன்று மொருவனா நின்று வளியுமு ழன்று வருமயிலே
மன்று மரதந குன்று முறைவனொன் வன்று யரமறியா
ரொன்று கனையல்கை கன்று பெறவரு ளின்று புரிகுவரோ. (ரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புரித ருஞ்சடை தரித்தும்வின் மதனனைப் பொடித்து
மென் பூங்காவி, விரித ருந்துகி லுடுத்தியு நீர்பொலி வேட
மோர்ந் திலடேவி, யரிய வெம்முலைச் சுவடுமாத் திரமுணர்ந்
தானையுற் றனளந்தோ, தெரிவின் மற்றிவள் பேதைமைக்
கென்செய்கோ திருமுடித் தமும்பிரோ. (சு)

நேரிசைவெண்பா.

தழுவுமையான் முன்னுந் தமிழிறையாற் பின்னுந்
தொழுபிறையான் மேலுஞ் சுவடு-கெழுமுவகி
ழின்று லெனுங்குறைபோ மென்மனஞ்சேர் வாட்போக்கி
யன்று லமர்ந்தா யடி.

கட்டளைக்கலித்துறை.

அடியுற்ற பாதலம் பொற்றேர் செறிக்குமஞ் சாலையொளிர்
கடியுற்ற செம்மணிப் பூண்வைத் திடுங்கரு வூலமுண்ணும்

படியுற் றதுவிளை நன்னில மென்பர் பசுந்தழும்பு
முடியுற் றவர்திரு வாட்போக்கி மேய முதல்வருக்கே.

புயவகுப்பு.

ஆசிரியச்சந்தவிருத்தம்.

தனதனன தந்த தனதனன தந்த
தனதனன தந்த தத்தத் தனந்தன.

முதுமறையு ணர்ந்து கவுணியர்மு னன்பர்
மொழிதமிழ லங்கன் முற்றப் புனைந்தன
முழுதுலகு மஞ்சி யதிர்தர வெழுந்த
முரணரம டங்கல் செற்றுப் பொலிந்தன
முகிழ்நகைய ணங்கு மலையனாயன் மங்கை
முலையெதி ருடன்று முட்டக் குழைந்தன
முடிமதிபொ ழிந்த நிலவெனவி ளைந்து
முதிர்பொடிதி மிர்ந்து பொற்புற் றிருந்தன
பதுமமலர் தங்கு மறையவர்மு குந்தர்
படுதலையெ லும்பு கட்டிச் சுமந்தன
பயின்மகம டைந்த கதிரவரொ முங்கு
படுமெயிறு சிந்த மொத்தித் திகழ்ந்தன
படவரவி னங்கள் பலபலவ ளைந்து
பணியெனவி ளங்க வொப்பிப் புனைந்தன
பனியிமய மங்குல் பொதிவதென வும்பல்
படுமுரிவை யொன்ற விட்டுச் சிறந்தன
மதுமடையு டைந்து வழியமுகை விண்ட

மணமருவு கொன்றை பெற்றுக் கமழ்ந்தன
மகிதலந டுங்க வடவரைபி டுங்கி
வரையினும்வ ணங்கி நிற்கப் புரிந்தன
மழலையமு தின்சொ லிளமகவு நின்று
மலரடிந டஞ்செய் பெட்புக் கிசைந்தன
மணிவலையம் விண்டு சிதறவிச யன்செய்
மலியமரொ திர்ந்து மற்கட் டிவின்றன
வதுவிதென நெஞ்ச மலைதலற வொன்றி
யடைபவர்ம லங்க ளட்டுக் களைந்தன
வகிலபகி ரண்ட நிலைகெடவெ ழுந்த
வவிர்சிகர விந்த மொப்பற் றெழுந்தன
வழகுகுடி கொண்டு புழுகுமலி சந்த
மணிபுதிசை யஞ்சி யெட்டப் பரந்தன
வரதநவி லங்கன் முடியமர்த ழும்ப
ரரசமையி லிங்கர் வெற்றிப் புயங்களே. (௯)

நேரிசைவெண்பா.

புயறவழ நின்றவாட் போக்கியர ஞர்மேன்
மயறவழ நின்ற மகளே—யயறவழ
நாணே கலையோ நகுவளையோ மற்றுள்ள
பூணே கொடுத்தல் புகல். (கo)

கட்டளைக்கலித்துறை.

புகலரும் வள்ள றிருமுடி காணப் புகுந்திளைத்தா
யகலரு மாரியர் கோன்வந் ததுகண் டறிகுறிவைத்

திகலருந் தாளுங்கண் டின்பமுற் ருனிஃதெண் ணுமிடத்
துகலருஞ் சீர்நும் மிருவருள் யார துணைவிதியே. (௬௧)

தவம். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உணைதருகா லுண்டுகா லில்லையென நடையொழிவீ ரோங்கு கான, வனைதருவெங் குகையிருளிற் புக்கிருள்போக் கிடமுயல்வீர் வையத் தீரோ,விணைதருகற் பகநாறு மிளிர்சிகர வாட்போக்கி வெற்பு மேவி, யிணைதருவான் புனற்கங்கை முடியவனைப் போற்றினுமக் கெம்மா சுண்டே. (௬௨)

அம்மானை. இடைமடக்காயீற்றடிமிக்குவந்த
நான்கடிக்கலித்தாழிசை.

எம்மா தவரு மிறைஞ்சுஞ் சடாடவியார்
செம்மா மணிவான் சிலம்பர்கா ணம்மானை
செம்மா மணிவான் சிலம்பரொனி ஞெய்கர்பொரு
ளம்மா விரும்புவர்கா ணற்றவரோ வம்மானை
யாசை யுடையார்கா ணரியரோ யம்மானை. (௬௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மான்கொண்ட கரதலத்திர் மதுணைபுகுந் தென்செய்திர் வளையல் விற்றீ, ரூன்கொண்ட வுயிர்வசைமே வுறிற்போற்று வணிகர்குழாத் தொருவ ரென்பீர், தேன்கொண்ட தெனப்பொருட்பா கமுங்கொள்வீ ரின்னுமவர் தெரியா ரோர்ந்து,கூன்கொண்ட மதிமுடியீ ரொன்னெனின்முன் னெனில துவுங் குறைவு தானே. (௬௪)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குறையின்மா ணிக்கமலை வெள்ளிமலை நாளுங்
குலவுசோற் றுத்துறைபாற் றுறைநெய்த்தா னமுநீ
ருறையில்கரச் சிலையம்பொன் வரைநெடுமான் முதலோர்க்
குறுபோகங் கொடுப்பதுநுந் திருவருள்பா லுறைவாள்
கறையிலறம் பலவளர்ப்பா ளொருதோழ னிதிக்கோன்
கரையில்பொருட் பங்களிப்பார் கனவணிக ருளர்நீர்
முறையிலெலும் பாதியணிந் தையமேற் றுழல்வீர்
முடித்தழும்பீ ரிதுதகுமோ மொழிமினடி யேற்கே. (கரு)

கட்டளைக்கலித்துறை.

அடிபடு மால்விழி வாட்போக்கி நாத ரவிர்தழும்பு
முடிபடு நீர்கொள் குடந்தோறு மேவ முயன்றுதவம்
படிபடு மாறெவன்செய்தீர் முன்னென்று பகைத்துடம்பு
பொடிபடு மாறுவிட் டீர்நன்று காண்கரும் புட்சங்கமே.(கசு)

மடக்கு. கட்டளைக்கலிப்பா.

சங்க வாய்முன மாய்ந்தது கூற்றமே
தாளெ டாமுன மாய்ந்தது கூற்றமே
யங்க மாவிகை செய்யவங் கொன்றையே
யளித்தல் பேரன்பு செய்யவங் கொன்றையே
செங்கண் மால்விழி யாரர விந்தமே
திருமு டிக்கணி யாரர விந்தமே
பொங்கு போர்வை தருமணிநாகமே
புக்கி லும்பைந் தருமணி நாகமே. (கஎ)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நாகமே யணிகலமாக் கொண்ட வாட்போக்கி
நாதருக்கென் னுளதுமணி மலையொன் றுண் டென்று
மோகமே கொண்டனையம் மலையுமவர்க் கெங்ஙன்
முழுதுமா முள்ளதுபன் னிருபாகத் தினிலோர்
பாகமே யதுபோது மெனிற்றிருமே னியிலோர்
பாதியா ளுமைமற்றைப் பாதியுள தென்னின்
மேகமே நிகர்மேனி மாலுளன்மற் றதற்கும்
வெறுவெளியே யிவர்க்குளது மெய்ம்மையிது மகளே. (கஅ)

நேரிசைவெண்பா.

மகளேமால் கொண்டதெவன் வாட்போக்கி யார்க்குத்
துகளேயா நீறுவினா தோற்றென்-புகளேறு
நாகம்பூ ணஞ்சா நகுபுலித்தோ லாடைமுடி
யேகம்பூ ணஞ்சா மெனின். (கக)

மதங்கு. அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எனக்கரிய வண்டரொனுக் கனக்கரிய கண்டருறை யெழில் வாட் போக்கி, மனக்கரிய வளம்பாடி மணிமறுகி னின்றுடு மதங்கியாரோ, சினக்கரிய நுங்கள்விழி வாளிரண்டு மேயுயிருஞ் சேரப் போழுங், கனக்கரிய வாளிரண்டு கைக்கொடுவீசு விரிலக்குக் கருதின்யாதே. (உ0)

கட்டளைக்கலித்துறை.

கருப்பங் கழனி வளைமா மணிவரைக் கண்ணுதருள்
விருப்பங் கழனித மாலயற் போற்றென்று வேண்டினுமெம்

முருப்பங்கழனி கழப்புரிந் தாலு மூறுத்தமனந்
திருப்பங் கழனி கருந்தளிர் பூவையுஞ் சிந்திப்பமே. (உக)

மடக்கு- எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மேதக வுரியாரும் போதக வுரியாரும்
விண்ணம் பணிவாருந் தண்ணம் பணிவாரு
மாதர மொழிவாருங் காதர மொழிவாரு
மமலேயம் பதியாருங் கமலேயம் பதியாரும்
பூதர வளைவாருங் காதர வளைவாரும்
பூதம் படையாரு மேதம் படையாரு
மாதல மிசையாருங் கோதல மிசையாரும்
வரதந வெற்பாரு மரதன வெற்பாரே. (உஉ)

வண்டுவிடுதூது.

கொச்சகக்கலிப்பா.

பாராய் வாட்போக்கிப் பரமனு மொண்காற்புள்
வாரா யறுகாற்புள் வண்டேநீ யாதலினு
லோராய் பயந்தபமுன் னுற்றவிரு காற்புளலே
சேரா யவர்பாலென் சிந்தைமய லோதுதற்கே. (உரு)

மடக்கு. எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஓதுமறை யாருமருள் யாதுமறை யாரு
முரிவையுடை யாருமழு வெரிவையுடை யாருந்
தீதுபதி யாருமுல கோதுபதி யாருஞ்
செல்வமுடி யாருநறு வில்வமுடியாருங்

கோதுபுரி யாரும்வெளி மீதுபுரி யாருங்
கோலமறி யாருமுயர் சீலமறி யாருங்
காதரவு ளாருமிய லாதரவு ளாருங்
கனவமலை யாருமர தநவமலை யாரோ. (உச)

மேகம்விடுதூது. கட்டளைக்கலித்துறை.

மலையா னிலத்து வருவேள் சினக்குமுன் மாமுகில்கா
டலையா னிலத்து வணங்குவல் சென்னித் தழும்பரங்க
மலையா னிலத்து விதயோகர் முன்வரு வாரணிம
தலையா னிலத்து மகிழ்ந்திருந் தேற்கத் தருதிரின்றே. (உரு)

வண்டுவிடுதூது. தாழிசை.

இன்றுபைங்கிளியை யேவினம்மைகை யிருக்குமோர்கி ளியொடுஞாசெயு,மெகினநேடியறி யாததேமுடிமு னெங்கு னின்றுசெவி யருகுறு, - மொன்றுமங்குலரு குறில்வளைத்தி வையொடுறுதியென்புசடை சிறைசெயு, முறுகருங்குயிலெவா ர்செவிலிபட்டதை யுணர்ந்ததேசெல வுளஞ்சிடேர், - துன்று தென்றலெதிர் சென்றிடிற்கடிது தோள்கொள்பூணினாவெய னக்கொளுந், துச்சிலல்லவென வண்டுவாழ்செவிதுணைந்து சேரும்வலி யார்க்குள,-தன்றுதொட்டெனது கொண்டைவா ழும்வரி வண்டிர்காண்மய லடங்கவு, மரதநாசலரிடத்துளைத் தவ ரணிந்தமாலைகொணர் மின்களே. (உசு)

காலம்.மடக்கு. எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மின்னுமற லுறவருந்திக் குயினடுக்குங் காலம்
விடாதுமற லுறவருந்திக் குயினடுக்குங் கால

மன்னுபசுந் தோகைபரி விற்குனிக்குங் கால
மதவேணந் தோகைபரி விற்குனிக்குங் காலந்
துன்னுகொடித் தளவமரும் பப்படருங் காலந்
தோயார்பித் தளவமரும் பப்படருங் கால
முன்னுவெயில் வெம்மையுறப் புணராத கால
முடித்தழும்பர் வெம்மையுறப் புணராத காலம். (உஎ)

கட்டளைக்கலித்துறை.

காலங் கழியு மவமே நமன்றமர் கைக்கொளுங்கான்
மாலங் கழியும் வகையுள தோமல மாயவெனச்
சீலங் கழியும் பருந்தாழ்கி னன்பரிற் சேர்த்தலனு
கூலங் கழியுந் திவைப்பேத் தரதந குன்றத்தனே. (உஅ)

நேரிசைவெண்பா.

குன்றுத வேங்கையுமொண் கொம்புபடு வேங்கையுமெய்
பொன்று தெனப்பொலிவாட் போக்கியே-நன்றுவோர்
மின்னைப் புரப்பான் மிளிர்தரவைத் தானருள்வைத்
தென்னைப் புரப்பா னிடம். (உகூ)

கட்டளைக்கலித்துறை.

இடம்படு மாணிக்க மாமலை மேவு மிறையவரோ
திடம்படு கூற் றடு நீரோயெல் லாம்வல்ல சித்தனெனி
னடம்படு தாமனா யென்னுளப் பாறை நடிமலர்த்த
வுடம்படு வீர்மறுத் தாற்சில வல்ல னென் றேதுவனே. (௩௦)

குறம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓதுவனப் பன்றிமருப் பொசித்தமலைக் குறவர்
குலந்தொருபெண் கொடுத்தகுடி யுதித்தகுற மகள்யான்
போதுறையு மோரிருவர் முத்தலைநாற் றலையார்ப்
புணர்குறிசொற் றனன்முனநின் பொலிமலர்க்கைக் குறியம்
மாதர்கரக் குறிபலவுங் கடந்துமே லாய
வாட்குறியாய் மருவுதலின் மறைமுதலா கமங்கூ
றுதரநற் குறிபலவுங் கடந்துவாட் குறிமே
லலங்கவொளி ரைந்தலையாற் புணர்குவையின் றறியே. (௫௧)

தவம். நேரிசைவெண்பா.

அறியா தவமே யடைந்தடவி நோற்ற
னெறியா தவமே நினைமின்-முறியார
நண்ணமா ணிக்கமலை நாத ரளித்தமரும்
வண்ணமா ணிக்க மலை. (௫௨)

தழை. கட்டளைக்கலித்துறை.

மலையா வருட்சிவன் வாட்போக்கி யன்ன மயில்வனப்புக்
குலையா விளந்தளிர் கொண்டுதன் மேனி குளிரவொற்ற
நிலையாக வேற்றுத் தளிர்மேனி யாயொப்பு நீத்துவிற
லுலையா தவநடு வாலாய மேவ வுடன்பட்டதே. (௫௩)

இயலிடங்கூறல். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

படவாளரவ மரைக்கசைத்த பரமர்வாழும் வாட்போக்கித்
தடவாள் வரையென் மனம்போன்ற தனித்தே மனையா

ளியனண்ப, விடவாள் விழிவேள் கழைக்கோடு வில்லே புருவ மெனேத்துயரங், கெடவாள் கொங்கை யிபக்கோடு கெட்டேன் மருங்குன் முயற்கோடே. (௩௪)

வேற்றொலிவெண்டுறை.

கோடுபொலி வாட்போக்கிக் குளிர்வரைமே லஞ்சுரும்பார்
குழற்கோமாது, மேடுபொலி கடிக்கொன்றை முடிக்கொன்ற
வெடுத்தணியு மெங்கோமானு
மலிதளிர்ப்புன்னையும் வண்டளிர்ப் பிண்டியுங்
கலிகருங் கொண்டலுங் கவின்றசெங் கொண்டலு
மெலிவில்பைங்குவளையும் விரும்புசெங் கமலமு
மொலிகெழு மிவ்விரண் டோருழைக் கண்டெனப்
பொலிதருந் தன்மையைப் புவியுளீர் பாருமே. (௩௫)

(ஒருபொருண்மேன்மூன்றடுக்கிவந்தவாசிரியத்தாழிசை.)

பார்வளர்மாணிக்கப் பராரை வரைமுடிமே
லார்வளர்செவ் வேணி யமலர்பொலி தோற்றஞ்
சீர்வளர்பொன் மேருவின்மேற் செங்கதிரை யொக்குமே
விண்பொலி மா ணிக்க விசால வரைமுடிமேற்
பண்பொலிநால் வேதப் பரமர்பொலி தோற்ற
மெண்பொலியெண் ணுமலைமே லேற்றுசுட ரொக்குமே
தூயமா ணிக்கச் சுடரார் வரைமுடிமே
லாயத மும்புமுடி யையர்பொலி தோற்றஞ்
சேயபவ ளக்கிரிமேற் செம்மணியை யொக்குமே. (௩௬)

நான்கடி வெளிவிருத்தம்.

ஒக்க வனைத்து மாக்கிடுவாரு மொருநீரோ
தக்க சிறப்பிற் காத்திடுவாரு மொருநீரோ
புக்க வைமுற்றப் போக்கிடுவாரு மொருநீரோ
மிக்க முடிக்கட் கிற்றுடையாரு மொருநீரோ. (௩௭)

கட்டளைக்கலித்துறை.

நீர்கொண்ட சென்னித் தழும்புடை யீரொன்மு னீள்விடை மேல், வார்கொண்ட கொங்கைச் சுரும்பார் குழலொடும் வந் தருள்வீர், நார்கொண்ட சிந்தையி லாதவ னாயினு நாடிநம் மைக், கூர்கொண்ட வாள்கொண்டு வெட்டிடு வானுட் குறித் திலனே. (௩௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குறிபடுபன் மணிவிற்றீர் மாதுலனாய் வழக்குரைத்தீர் கூ டன் மேவி, நெறிபடுமற் றவையோரா ராரியநீர்ச் சிறுகுறை யு நிரப்பு கென்று, பறிபடுவே ணிப்புனல்வாட் போக்கியீர் பெருங்கணக்குப் பார்த்து நின்றீர், செறிபடுபல் கிளைவணிகர் நுங்கூட்டுக் கிசைந்தனரச் சிறப்பொன்றேர்ந்தே. (௩௯)

நேரிசைவெண்பா.

ஓராழி மேற்கிடக்கு மோராழிக் கேவிடுக்கும்
போராழி யேந்திப் பொலியுமே—நோரா
வெம்மா னகத்திருக்கை வீத்தேந்து வாட்போக்கி
யெம்மா னகத்திருக்கை யே. (௪0)

பாங்கியிறைவனைநகுதல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏறெனவிப் புனத்திலடிக் கடிவருவார் நகர
மெங்கென்பார் நெடுங்கணக்கு மோர்ந்திலரோ நீரோ
பேறெனநும் மிடையுணர்ந்துற் றனமென்பா ரிடையின்
பெற்றியிவ ருணர்வாரோ கைம்மானே டியதிவ்
வாறெனநே டுவர்கைம்மா னுடையவாட் போக்கி
யண்ணலோர் முறிகொள்ளு மென்பார்கொள் வீரிக்
கூறெனவிப் புனவேங்கை கொடுக்கவிசைந் தனமோ
குறித்தவிவர் கருத்துவிரித் துரைக்கரிதா யினதே. (௨௧)

மடக்கு.

(பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

ஆயு மிதழ்வாய் பானலமே, யகலு மிதழ்வாய் பானலமே
யணவ மருங்கா மனப்புள்ளே, யடவ மருங்கா மனப்புள்ளே
பாயுங் கயலா யினவளையே, பாவிக் கயலா யினவளையே
பவளம் படர வருந்திடரோ, பாராய் படர வருந்திடரோ
மேயுங் குருகே யமர்கழியே, வினையேற் குருகே யமர்கழியே
விரைந்தம் பரவாய்ப் படர்படவே, வினையோ பரவாய்ப் பட
ர்படவே, வாயு மலராக் கழுநீரோ, மாறு மலராக் கழுநீரோ
வளமா மலையா ரணையாரோ, மணிமா மலையா ரணையாரோ. ( )

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்கொண்ட செஞ்சடையீர் வணிகருணீ ரொருவரெனற்
கைய மில்லை, கூர்கொண்ட சூலமழுக் கொண்டிருந்து மண்

டுசினங் கொடுது ரத்திப், போர்கொண்ட வாரியர்கோ ன்வா
ள்கொண்டு வெட்டிடவும் பொறுத் துக்கொண்டீர், சீர்கொண்
ட விதனுன்மற் றவர்கொடுக்கும் பொருட்பங்குஞ் சிதை
ராதே. (௪௩)

நேரிசைவெண்பா.

சிதைக்கலமே யாகின் றிருவடியைப் பற்றிச்
சிதைக்கலமே யாகின்ற தீமை—புதைக்குமெழு
தோற்றப் பரவை மூடியாய்சொல் வாட்போக்கி
யாற்றப் பரவைமுடி யாய். (௪௪)

சம்பிரதம். பதினன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆயுமிவை மெய்ம்மையொவ் வொருவிரற் றலையொவ்வொ
ராழிகோத் துறவெடுப்ப
ணம்பொற்சி லம்புகால் வளைதரப் புனைகுவ
னண்டங்கள் பலத கர்ப்பன்
பாயுமலை சூழ்புடவி வாயலரி மலர்தரப்
பண்ணுவன் குவலை யங்கைப்
பற்றுவன் றிக்காம்ப லோடுவெள் ளாம்பலும்
பற்றிக் கசக்கி யெறிவ
னேயுமத யானையை யெறும்பிதான் மந்தியை
யிருந்தும்பி தானென் னவே
யிப்பொழு தியற்றிடுவ னின்னமும் பலசெய்வ
னித்தனையும் வித்தை யலவாற்
காயுமயின் மூவர்புரம் வேவநகை யாடுகங்
காதரனு மாத ரன்சங்

கரனரத நாசலக் கடவுளுக் கிணையாவோர்
கடவுளையு மறிவிப் பனே. (சரு)

மடக்கு.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறிதரு மிருக்கை மாணிக்க மலையே
யமையில்சொன் மாணிக்க மலையே
யவிர்தரும் வேணி யுருவுமோ ராறே
யத்துவா வுருவுமோ ராறே
மூறிதவின் முடியேற் றதுமொரு வெட்டே
மூர்த்தமுந் தோமொரு வெட்டே
மூடிய தெதிரி லாவுவா வுரித்தே
மூலமீ றிலாவுவா வுரித்தே
தறிபக வெழுந்த தம்மவன் கணையே
தாடரிப் பதுமவன் கணையே
தாளெடுத் தாடிக் களிப்பதம் பலமே
சாற்றுவார்க் களிப்பதம் பலமே
குறிகொடேர் விடுவா ரம்புயத் தாரோ
கொன்றைவா ரம்புயத் தாரோ
கோவதெவ் வளவா மனத்தனை யனையே
கொள்ளுவா மனத்தனை யனையே. (சகூ)

சந்தத்தாழிசை.

தனனதான தனனதான தனனதான தந்தனா.

அனாவிராவ வணியுமாடை யதளதாக வன்றிவே
றறைவதாக வரவமாக வணியதாக வென்புதார்

புனைவதாக வினையுகீறு புரியுமூனு நஞ்சமே
புணர்வதாக வுணர்தராது புணருமாசை கொண்டுளாள்
கரையுருத துயரினூடு கழியுமாறு கன்றியோர்
கடியபாவி மதனனேவு கணைதுழாவு நன்றிதோ
வரையவாரும் வினையவாசம் வனையின்மாலை தந்துநீள்
வனையிராசன் மகளோடாடி மகிழிராச லிங்கரோ. (௬௭)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருதுந் தருதும் விருதுமலி கதியென் றுனைப்பீர் கொதிசகடு
மருதும் பொருது மெருதுடையீர் மணிமா மலையீர் யானின்ற
விருதுங் கவன முலையாளைச் சுரும்பார் குழலி யென்றறதுந்
தருதுங் கருதமிடமென்னீர் தருவீர் தகாவப் பெயராட்கே

கட்டளைக்கலித்துறை.

பெயராத மாற்குழி வீழ்மனத் தேனைப் பிறங்கருளாந்
துயராத வேக்கொண் டெடுத்தேறி னீமுத் துகளுமறு
முயராத தோவெனும் வாட்போக்கி யாய்பில முற்றபொற்றே
ரயராத வேக்கொண் டெடுத்தேறி முப்புர மட்டவனே. (௬௯

நேரிசைவெண்பா.

அட்ரும்வன மேவுமிரண் டாயிரங்கோ டேந்திப்
படரும்வன மேவலரோன் பண்வாய்—தொடருமே
நாட்போக்கி யாஞெருத்த னையா தருள்புரியும்
வாட்போக்கி யாஞெருத்தன் மா. (௭௦

சித்து. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமேவு வாட்போக்கி மாதேவர் தமக்கிருப்பு வரையைமு ன்னுட், டுமேவு வெள்ளிவரை யாக்கியவண் சித்தர்யாஞ்சொ ல்லக்கேண்மோ, பாமேவு மற்றவர்கை நாகமும்பொன் னுக்கி னந்தாள் பணிவா ரோர்க்குப், பூமேவு நாகலோ கத்தையும் பொன் னுலகாகப் புரிந்தோ மன்றே. (ருக)

இதுவுமது. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அன்றுமது ளரியினெல்லாம் வல்ல சித்த
 ராயினு ரடிபரவி யருண்மா ணிக்கக்
குன்றுறையுஞ் சித்தர்யாம் புற்கை யேனுங்
 கூழேனும் பசிதீரக் கொடுவா வப்பா
வின்றுவரு மிரும்புதனை யொன்றுஞ் செய்யா
 திருந்துதயத் துதித்ததுபொன் னென்னச் செய்வோ
நன்றுமறு நாள்வெள்ளி யெனவுஞ் செய்வோ
 நானிலத்து நம்மருமை யறிவார் யாரோ. (ருஉ)

இதுவுமது. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆரப்பா நம்மருமை யறியவல்லா
 ரகிலநிகி லம்புகழ்வாட் போக்கிக் கண்டக்
காரப்பார் சடையார்மே லாணை மெய்யே
 கரிகொணர்க விரும்புமா தங்கஞ் செய்வோம்
பாரப்பா வப்பரம ருெருத்துக் கொட்டில்
 பைம்பொன்னே யெனச்செய்தோ முனமிப் போது
மோரப்பா வெனக்கொடுவா தாகந் தீர
 முகந்தடிசி லளித்திடினு முகந்துண் போமே. (ருங)

கலிவிருத்தம்.

உண்ணு நஞ்சமு தாகுமு ணக்கமு
தெண்ணு நஞ்சம தாகுமெ ணக்கிதெ
னண்ணு மாணிக்க மாமலை யாய்நகப்
பண்ணும் விண்ணம்ப டர்மதி வெம்மையே. (ருச)

கைக்கிளை மருட்பா.

வெம்மையொடு தண்மை விரவத் தருமூலக
மும்மை யுடையான் முகநோக்க மம்மா
தகரரு மற்றவை தனித்தனி யெழுத்தரும்
புகரரு மொருவாட் போக்கிப்
பகரரு மடந்தை பணிமுக நோக்கே. (ருரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நோக்குறுமா ணிக்கமலை யெதிர்ப்படுமோர் பொருளகத்து நுழைவ தன்றித், தாக்குமது தன்னகத்து நுழையவிடங் கொடாதமருந் தகைத்து மீது, தேக்குமொளிப் பரம்பொருளு மத்தகைத்திவ் வொப்புமையின் றிறமு ணர்ந்து, தூக்குநவில் பவரனைய பொருளைமலைக் கொழுந்தெனலத் துதிமெய் தானே. (ருசு)

ஊசல். ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

துதிக்கும் பரமர் சுரும்பார் குழலோ
டுதிக்கும் வாட்போக்கி யுறையுஞ்சீர் பாடிக்
கதிர்க்கு முலைகுலுங்கக் கைவளைக ளார்ப்ப

வதிர்க்குந் துடியிடையீ ராடுகபொன் னூசல்
ஆயும் பிடிநடையீ ராடுகபொன் னூசல். (௫எ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

தான தான தந்தன தான தான தந்தன.

ஊச லாடு நெஞ்சமே யோவி மாய வஞ்சமே
வீச லாதி யங்கரோ மேவி ராச லிங்கரோ
வாசம் வீசு தென்றலோ வாது பாய நின்றலோ
மூச வேள தங்கையே மூட வாடு மங்கையே. (௫அ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மங்கையொரு பங்குடையார் மாணிக்க மலையொளிமேன் மருவி மென்பூஞ், செங்கையர மகளிருல கத்தமர்வெண் க ளிற்றுடலஞ் செம்மை செய்ய, வங்கையொரு சதகோடி யா னெய்த்தோர் மூழ்கவெப்போ ராற்றிற் றென்று, சங்கையு றும் வானுறு சோணைமதி பரிதியெனத் தயங்கு மாலோ. ( )

கொச்சகக்கலிப்பா.

மாலாய பச்சை மயிலையிடம் வைத்தனையென்
பாலா யவளும் பசப்புற்ற காரணத்தான்
மாலாய பச்சை மயிலே வலத்துவைவிண்
பாலாய வாட்போக்கிப் பைம்பொற் சிலையானே. (௬0)

ஈற்றடிமிக்குவந்த நான்கடிக்கலித்தாழிசை.

ஆனவனு காதவனென் றன்புடையார் பாலாயா
னுனவனு காதவனே நாளுக வுட்குறிக்குங்

கோனவன்மு ஞகியல்லாக் கோமான்மா ணிக்கமலை
வானவன்சீர் பாடாதார் வாயென்ன வாயே
மலைக்கொழுந்தென் றுணாயாதார் வாயென்ன வாயே. (சுக)

களி. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாயாது வருந்துமுயி ரும்பலவே பரமர்
வாட்போக்கி யமருமெழு மாதரடிப் பூசை
வீயாது செயிற்பிறிதும் வேண்டுவதோ விண்ணோர்
விரும்புசுரா பானத்தா லமரரோ யானர்
தேயாது தாலத்தின் கட்குடியர் நரர்மா
றெண்டிணாக்கட் குடியனய னலரின்கட் குடிய
ஞயாது வீணுகத் திரிவதெவ னந்தோ
வடைவரோ குருக்களொழித் தரியபர கதியே. (சுஉ)

இதுவுமது. கட்டளைக்கலித்துறை.

கதிகாண் வழியொன்று கூறுதுங் கேண்மின் கடற்புவியீர்
விதிகா ணரியதென் றேகஞ்ச மேவுவன் விண்டுவென்பா
னிதிகா ணெனக்குல்லை கொள்வானிப் பூரண நீத்தவென்ன
மதிகா ணிதுகொளின் வாட்போக்கி யார்சத்தி வாய்ப்புறுமே

(இதுவுமது-பதினான்கு சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

உற்றவொளி மாணிக்க மலையிறைவர் பணையடி
யுவந்திருப் பதும்வே டர்கோ
னுதவெச்சி லூன்மிசைந் ததுமறை மகஞ்செய
வுணாத்தவிதி யுந்தெளி கலார்

கொற்றமுறு மமரரொரு தக்கன்வேள் விக்களங்
குறுகியரு ருற்ற துணரார்
கொல்லா னெனுங்குறட் டொழுமெனலை
விதியெனக் கொள்வர்மறை வினையே யெனுர்
பொற்றகலை மான்விருப் பன்பிரமன் மாயவன்
போகுமான் பின்ரெறு டர்பவன்
பொருகேழன் மீனுருவ வாவினன் குக்குடப்
புட்பற்று வோன்மு ருகவேள்
சொற்றவிவை யாவுநன் குறவுணர்ந் துட்கொடு
தொடங்குமின் சத்தி பூசை
தூயதே றலுமினிய தசையுமொரு வீர்பெருஞ்
சுத்திமுத் தியுமடை விரோ. (சுச)

மடக்கு கட்டளைக்கலிப்பா.

அடையு மாலை யொருவண் டரங்கமே
யப்புக் கூடு மொருவண் டரங்கமே
யிடையி லாவுமை யேயிடப் பாகமே
யிபவ னத்தலை யேயிடப் பாகமே
யுடையெ ஞவனா கூடுவ தாசையே
யுன்னு மன்பரங் கூடுவ தாசையே
சடைவி ராய விருப்புச் சிவாயமே
சங்க ரற்க விருப்புச் சிவாயமே. (சுரு)

இதுவுமது.

மேவ லார்புரத் துந்தழன் மூட்டுவார்
மேவு வார்புரத் துந்தழன் மூட்டுவார்

காவன் மேவிய மாற்கும் வெளிப்படார்
காவ லோவிய மாற்கும் வெளிப்படார்
ஓவ லோவினர்க் கும்பசப் பூட்டுவோ
ரோவன் மேவினர்க் கும்பசப் பூட்டுவோர்
நாவ லார்புகழ் மாணிக்க மாமலை
நாய ஞரு நடுநிலையாளரோ. (சுசு)

நேரிசைவெண்பா.

ஆளாக வந்த வடியேற் கடர்கரும்பு
வேளாக வந்த விரவிழித்த—காளாய்
சிவாய வனையாய் தெளியவனா யாய்திக்
கவாய வனையா யருள். (சுஎ)

மறம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருள்செறிமா ணிக்கமலை யிறைவன் செம்பொ
னணைத்தொருவா ரிதிநாப்பண் மிதக்குந் தோணிப்
பொருள்வணிகன் மூளை பல்கா னடந்த தோர்ந்து
போராட்டத் தொருவளர்ப்புப் பெண்ணை யீந்தோங்
தெருள்கிலனு யவற்கதிக னென்று வேந்துந்
தேறியொரு பெண்கேட்டான் செப்பி வற்குங்
கருளகல்யா னதிகனென வினிப்பார்ப் பானுங்
கண்ணறக்கேட் பான்மறவர் குலச்சீர் நன்றே. (சுஅ)

இதுவுமது. கலிவிருத்தம்.

நன்றக மகிழ்ந்துமற நங்கைவிழை வுள்ளத்
தொன்றரசு பொய்த்திரு முகங்கொடிவ ணுற்றுய்

கொன்றனையன் மெய்த்திரு முகங்கொணர்தும் யாமே
யின்றறிக துதமணி வெற்பரரு ளோற்றே. (சுகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏதமில்வாட் போக்கியிறை பல்வளைபார்ப் பனமடவா ரி டங்க வர்ந்து, மேதகுகூ டலில்விற்றுன் முனமிந்நாட் கவர் வதெங்கு விற்பான்கொல்லோ, வோதல்செயு முலகுள்ளங் கவர்கள்வ னுயிர்கடொறு மொளிக்குங் கள்வன், மேதகைய விவனெனும்யான் வளைகவருங் கள்வனென விள்ளு வேனே

கட்டளைக்கலித்துறை.

விள்ளும் படிவளை வாட்போக்கி னீர்நும் விரைமலர்த்தார்
நள்ளும் படிகொடுப் பீர்மறுப் பீரொனி னுடுநுதற் (வீர்
கொள்ளுங்க ணுங்கட் செவிப்பூணும் தாளுங் கொடுத்தருள்
உள்ளுங் கணைமதன் றென்றல்வெண் டிங்க ளுரனறவே. ( )

மறம். நேரிசைவெண்பா.

அறவர்புகழ் வாட்போக்கி யண்ணல்வரைப் பால்வாழ்
மறவர்குலப் பெண்வேட்ட மன்னர்—திறவி
னுறுவார்பின் றேமென் றுடன்றமர்த்து மாய்ந்து
பெறுவார்பின் றேவர்குலப் பெண். (எஉ)

கட்டளைக்கலித்துறை.

பெண்பா லுகந்தருள் வாட்போக்கி மேய பெருந்தகைக்கு
வண்பால் கவிழ்த்தபுள் ளோகுயில் வாரிமந் தாகினியோ

விண்பா லுயர்தென்றல் வெற்பெழு மாதர் விழைந்தவெற்போ
கண்பா லிருளன்ப ருள்ளிரு ளோபுறங் காண்பதற்கே.(எ௩)

பாண். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காணரிய மாணிக்க மலைவளரோங் கொளியிற்
கலப்புறுமின் பிதுவெனக்கொண் டிலைப்பறுசீர்த் தலைவர்
நாணரிய பரத்தையவா வினரினிமற் றெனையு
நச்சுவர்பாண் மகனேயன் பினர்நின்பா லெனநீ
பூணரிய பொய்பூண்டு வீணையிசைத் திடுதல்
போதுமிவ ணின்றகறி நின்றனையே லெறியுங்
கோணரிய கற்களினின் கருந்தலையுஞ் சுவற்பாற்
கொண்டிடபெத் தருந்தகரு மண்டிடுமான் முடிவே. (எச)

வஞ்சித்துறை.

முடித்த மூம்பர்சீர்
படித்த வன்பர்பூ
வடித்தொ ழும்பரோ
தடித்த வின்பரோ. (எரு)

வஞ்சிவிருத்தம்.

இன்ப ராயொன்றி ரண்டெனும்
வன்ப ராய்வழி மாற்றுவார்
முன்ப ராய்முடிக் கீற்றுளா
ரன்ப ராயமர் வார்களே. (எசு)

கட்டளைக்கலிப்பா.

ஆர வாவு படைநெடுங் கண்ணுமை
யாள வாவொரு பாலளித்தா ரந்தச்
சீர வாவு மெனக்கொரு பாலருள்
செய்த வாவிக் கொடாதமர் வாரமென்
பார வாவு குளிர்புனல் வெங்கொடும்
பால வீவழ வேந்திப் பொதுநின்று
நார வாவு முடித்தழும் பாளர்தா
நடுவி லாதவ ரென்னிலென் னவரோ. (எஎ)

நேரிசைவெண்பா.

ஆவா வடியே னலந்தே னருள்வேத
மாவாவடியேன் மழுப்படைக்கைத்—தேவா
வரும்பாச மைந்துமற மாற்றூர்வாட்போக்கி
யரும்பாச மைந்து மற. (எஅ)

இடைச்சியார். அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அறவிடையார் வாட்போக்கி யண்ணலார் நகரிடைச்சி யாரோ யுங்க, ளூறவிடையார் வெறுப்புறுவா ராடைநீக் குபுபணப்பா லுறவெற் கீயுந், தெறவிடையா ரளூழவா திரண்டுபாற் குடங்களுமென் செங்கைக் கொள்வேன், பெறவிடையா ரருள்புரியு நயமோரோ மோரொனுஞ்சொற் பேசி டீரே. ()

இதுவுமது. நேரிசைவெண்பா.

பேசுமா ணிக்கமலைப் பெம்மா னணிநகரத்
தேசுமாண் வீதியுலாஞ் சிற்றிடைச்சி—மூசுபூ
வண்டரோ யாவார் வனமுலைசேர் வார்யாரு
மண்டரோ யாவார்மெய் யாம். (அ௦)

வலைச்சியார். கட்டளைக்கலித்துறை.

ஆவேறு மையர்செம் மாணிக்க மாமலை யாளர்மலர்
மேவேறு கூந்தல் வலைச்சியர் போகம் விரும்பியன்றே
நாவேறு நால்வர்தம் பாவேறு மாலை நலமணக்குந்
தூவேறு தோளிற் புலவார் வலைமுன் சுமந்ததுவே. (அக)

கலிவிருத்தம்.

வேலைவாய் விடமுணும் விருப்ப னென்கனி
மாலைவா யமுதுணும் வாஞ்சை யைவத்திலார்
கோலவாய் மணிவளைக் குழகர் மற்றவர்க்
காலவாய் விருப்பமே யளிக்கு மாலையே. (அஉ)

வலைச்சியார். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாலைமுடித் தழும்பரருள் போலெனக்கு வெளிப்பட்ட வ
லைச்சி யீர்நுஞ், சேலையணைத் திடச்சிலர்வா யூறுவரால் செ
ளிறுசெறி திருக்கை கோப்ப, வாலையடு கரும்பினுடைந் துள
மலங்கு வார்சிலர்சொல் லயினா யேற்க, வேலையொழி வார்
சிலர்யா ஞானமன் னச்சுறவு மேவி னேனே. (அங)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேவார் புரஞ்செற்ற வாட்போக்கி யார்தில்லை
மேவிநாங் கண்ட தில்லை
மேவால வாயால வாய்மனண் ணுமலை
விராவியக னண்ணு மலை
மாவார் கழுக்குன்றம் வன்கழுக் குன்றமோ
மலியொற்றி யூரொற்றி யூர்
வாஞ்சியம் வாஞ்சிய மிபக்கா டிபக்காடு
மறைவனம் மறைவன நலத்
தாவார் விரும்பிமரு வாரூர் திருக்காழி
யம்மமரு வாரூர் திருக்
காழியா வடுதுறை யடுக்குமா வடுதுறைந
லவிநாசி யவிநாசி வண்
காவார் பெருந்திருக் காளத்தி யுனாதிருக்
காளத்தி யென்று கருதிக்
கழித்தென வொழித்திடி லழித்தல்செய் பழித்தளை
கழன் றுய்வ தென்று மனமே. (௪௯)

கூத்தராற்றுப்படை, நேரிசையாசிரியப்பா.

மனனமர் பவுரி மலைப்புப் பித்தங்
கடகமுள் ளாளனங் கரணங் குனிப்பு
வீரட் டானம் விரும்பும் பிரமரி
பரத மிலயம் புரிய மும்பித

மாமுதற் பலவு மரிறப நடிக்குங்
கூத்தன் மகனே கூத்தன் மகனே
கடற்புவி யாளுங் காவலன் மகனல
னின்போல் யானு நிகழொரு கூத்தன்
மகனே யென்வாய் மாற்றங் கேண்மதி
வலம்பா டொழிக்கு மிலம்பாடெய்தி
மெய்நவின் றறியா வீணர்வாய் பொருவக்
கொடிறு வீங்காது குதட்டலு மொழிந்த
வாயிடை நீர்நசை வந்த காலை
யுறுமறு சுவையுளோன் றுள்ள வூற்றலா
னறுதி செய்தாங் கரும்பசி மேவின்
மற்றதை யொழிக்கும் வகையறி யாது
மூற்ற வருந்தி மூர்ச்சித் துடைந்து
சாந்திரா யணங்கிரிச் சரமுதற் கொடிய
விரதங் கொண்டோர் மேனியே பொருவ
வென்பு நரம்பு மெண்ண வெளிப்பட்
டுதிற் பறக்க வுடம்படு மேனியிற்
போர்த்த போர்வை புன்மயி ருருவிப்
படிந்துதன் காரணம் பரப்பிக் காட்டச்
சிலம்பிநூல் கிழுஞ் சிதன்மண் மேலும்
பொதியவுட் பட்ட புற்செறி குரம்பை
யுள்வாய்ப் பஃறுளை யொருபட லடைத்தாங்
கீந்திலை வெளிப்பட் டெங்குமுறுத்தப்

படுமொரு பழம்பாய் விடுதலை யணையொடு
நாணிலாத் தனுவெண் நகத்தனு முடக்கி
வாடை வந்துடற்ற மலிகுளிர்க் குடைந்து
சானு விரண்டுந் தாடி தகர்க்க
வோட்டமு மதரமு மொழிவின்றி நடுங்கத்
தருமிரு நிரைப்பலுந் தாளந்தாக்க
வுலங்கு மசகமும் விலங்காது கறிக்கப்
பசித்தழல் வெதுப்பப் பழவினை நினைந்து
முடக்கொழி யாது கிடக்குங் காலைப்
பல்லியு மரணையும் பாங்குற முட்டையிட்
டெல்லியும் பகலு மிரியாது கிடக்கும்
பவுத்த ரமணர் பாழ்நுதல் பொருவ
வடலைகண் டறியா வடுப்பக மருவிப்
பெரிது நோக்கிப் பெருமூச் செறிந்து
மாலைத் தாமரை மலர்புரை முகத்தொடு
மதுவந் துளிக்கு மழலைவாய்ச் சிறாஅர்
பொதிசித ருடைக்குங் கதியில் லாது
கையே கொண்டு மெய்பினை மூடிய
வேயடு மென்றோட் டாய்முக நோக்க
மற்றவள் வருந்தி வறுங்கை நீட்டி
மார்பிடை யணைப்பச் சோர்தரு கண்ணீர்
சிறிதிடை யின்றியச் சிறாருட னனைப்ப

மற்றவ் வீர மொற்றிடக் கருதி
யொருகை நீட்டி யொருவருக் கொருவர்
கோவணம் பறிக்கக் கூகூ வென்றுங்
கழுகுர லென்செவி யுழுகுர லாக
வென்செய் வாமென் றிறப்பதற் கெண்ணி
யொருப்படு காலைநல் லூழ்பிடித் துந்த
மடிசற் றின்றிக் கடிதவ ணின்று
வெளிவந் தம்ம விரைந்து நடந்து
மாணா டென்னுஞ் சோணா டடைந்து
பூவிரி பொழிற்குலைக் காவிரி மூழ்கித்
திருத்தரு மந்நதித் தென்பா லுற்றேன்
பாயிருள் பருகும் பகற்கதி ரநேக
மோருழித் திரண்டாங் குதித்துநின் றென்னச்
சேயொளி விரிக்குஞ் செம்மலை யொன்று
கண்டன னங்குக் கைகுவித் தேத்திப்
பெயரரு மிம்மலைப் பெயர்யா தென்று
வினவினன் கேட்ட மேதகு பெரியோ
ரரதநா சலமீ தலங்குற விதன்மேற்
றழைதர வமர்சிந் தாமணி யொன்றுண்
டன்னது காண்போ ரரும்பெறல் வளங்க
ளெல்லா முடையா ரென்றினி திசைப்ப
வொருங்கெழு மகிழ்வி னூக்கமிக் கடைந்து

படித்தல நின்றுவிண் படர்வதற் கிட்ட
வேணியிற் பொலிசோ பானவழி யேறிப்
பிறங்குறும் வயிரப் பெருமாள் காவலி
னறங்குல வம்மலை யணிமுடி யடைந்து
செயிரறு பொன்செய் சினகரம் புக்காங்
கெய்ப்பிடை வைப்பொன் றெதிருறக் கண்டெனச்
செந்தா மரைக்கட் டிருமறு மார்பனு
மந்தா மரைவா ழண்ணலு மின்னுங்
காணுப் பொருளைக் கண்டனன் மாதோ
தனிப்பெருந் திருமுன் றண்டனிட் டெழுந்தே
னடங்கா வுவகை மடங்காது பொங்கக்
கூடினன் றழைந்துசற் றுடின னப்பொழு
தெண்டோ ளப்பொரு ளின்னருள் சுரப்ப
வடதிசை நிதிக்கோன் மனமழுக் கறுப்பப்
பெறலரும் வளங்கள் பெரிதும் பெற்றன
னன்றே யுவகை யார்கலி மூழ்கின
னின்னே விளைந்தவ ணேகுதி
யென்னே பெறலரி தெல்லா முறுமே. (௮௫)

நேரிசைவெண்பா.

உறவேத வித்தா யொளியிழைவாட் போக்கித்
திறவேத வித்தாய்ச் சிறந்தார்—நறவே
தருங்கொன்றை யம்பார் சடையதளித் தார்நம்
மருங்கொன்றை யம்பார் வரார். (௮௬)

கட்டளைக்கலித்துறை.

வரந்தரு மாணிக்க மாமலை யீசர்தம் வாம்பரியோ
திரந்தரு பாதுகை யோசிலம் போதிருக் கோவணமோ
வுரந்தரு மாதன மோகோயி லோநன் கொளிருருவோ
பரந்தரு வந்திய ரோமொழி யோமெய் பகர்மறையே. (அஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மறைபுகலும் வாட்போக்கி வள்ளலுக்கு விடையுருவாய்
மாலே செங்கை, யுறையொருகோ டொழித்திருகோ டு
ற்றுசை யிலாமணிநீத் தோசைமேய, வறைமணிபூண் டடர்
விடமாற் றிடுவானீத் தஃதணுகா தமர்வா லுற்றுய், நிறைப
ரேனர்ந் தனையேமா வாம்பொழுது மவற்சுமக்க நினைதனன்

குறளடிவஞ்சிப்பா.

நன்றென்பதுந் தீதென்பது
மொன்றும்பவ மென்றுங்கொடு
கொதியாமஞர் பதியாவொரு
சிறுநாயினேன் மறுகாவகை
யருள்புரிமதி கருமுகிலுகைத்
தெழுபுனிதனுங் குழுவமரரு
நறையிதழ்மல ருறைமுனிவனும்
வனமாலிகை புனைதோளனும்

பொறிவலியொருங் கெறியுறுவருஞ்
சூழ்பாரகம் வாழ்வாரொடு
முடிவறவடைந் தடிதொழுதெழ
நெடுமறைகளி னொடுதுதிசெயச்
சுரும்பார்குழ லரும்பார்முலை
தொடைமார்பகத் திடைமூழ்குற—நாளும்
புண்ணியம் பொலிவாட் போக்கி
விண்ணியன் முடிமேல் வீற்றிருப் போயே.(அகூ)

(கொற்றியார். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.)

இருப்பொலிநீர் வைப்பானு ரேங்கிடச்சக் கரஞ்சுழற்றலெ ன்னைமால்சேர், தருப்பொலியும் வடமலைதென் மலைகாட்டி யுடனனந்த சயனங்காட்டிற், றிருப்பொலிமா லடிமைபெனு நமக்கடிமை யாவறுழாய் செறிமணித்தார், குருப்பொலியப் பூண்டுமுடித் தழும்பர்விழாக் கண்டுவெக்குங் கொற்றி யாரே.

பிச்சியார். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆர்கொண்ட முடித்தழும்ப ருட்பவனி நோக்கி
யணிமறுகிற் சுழன்றுடி யடைபிச்சி யாரே
கூர்கொண்ட விழிநெடுவே லிருக்கவொரு சூலங்
கோடன்மிகை வெண்ணீறுங் கண்மணிமா லிகையும்

வார்கொண்ட செஞ்சடையும் பூங்காவி யுடையு
மயக்கமறுப் பதுமறந்து மயக்கிடுமோ னுமைச்சார்ந்
தேர்கொண்ட விக்கோலங் கொண்டதுமா மூனிவ
ரியல்பனைத்துங் கவர்வதற்கோ வியம்புவிர்மற் றெனக்கே.

(விறலி. அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

என்னை மேவுறு மிறையவன் றலையளி யென்னிடம் புக
ழாயேன், முன்னை யாலவா யிடத்துவாட் போக்கியார் மூதி
ரருளால்வென்ற, பொன்னை நேரான வுள்ளூவல் விறலிநீ புக
ழ்வையே லிசைதோற்றுப், பின்னை மற்றவட் சுமந்தவ னே
ரொனப் பெரிதுமெள் ளுவலோரோ. (கூஉ)

நாரைவிடுதூது. கொச்சகக்கலிப்பா.

ஓராப் கடுமொழியு மோரா யனங்கர்மூனிந்
தாரா யெழவுறுநோ யாராயாய் திங்கள்சுடல்
பாராயா னந்தமூவப் பாராய் மூடித்தழும்பர்
தாராய் மடநாராய் தாராயுண் ணுராயே. (கூரு)

நேரிசைவெண்பா.

ஆயும்வாட் போக்கி யரன்மூடிமே லாரியன்கூர்
தோயும்வாட் போக்கியநாட் டோன்றும்வடு—வாயிடைவாழ்
மங்கையடை யாணிர் வடிவமொழித் தாலடையுஞ்
சங்கையடை யாவாறு தான். (கூச)

கட்டளைக்கலித்துறை.

தானே தனக்கொத்த வாட்போக்கி நாத சடாமுடிமேன்
மீனேய வெள்ளல ரோடுவைத் தாய்மன வெண்கலையை
யூனேய பல்லுயிர் சூழடிக் காரல ரோடுநறுங்
கானே யுறவைத்தி யென்றீ யமனக் கருங்கலையே. (சரு)

கலிநிலைத்துறை.

கலந்த காதவென் பாக்கிவாட் போக்கியைக் கரும்பு
கலந்த காமர்சொல் லோடுகண் டினிதுப கரும்பு
கலந்த காரமே வாதுதி வினைகட கரும்பு
கலந்த காவென லாமண மாமயற் கரும்பு. (சசு)

கட்டளைக்கலித்துறை.

புரிதரு மாணிக்க வெற்பார் வதனம் பொலிவிழியுட்
பரிதரு மொன்று மறைந்து சுடும்வெளிப் பட்டுச்சுடும்
விரிதரு மொன்றிவை தீர்சுடு கண்ணெடு வேற்றுமையென்
னெரிதரு செந்தழ லேமேனி யார்கண் ணியல்புமதே. (சஎ)

நேரிசைவெண்பா.

அதரஞ் சிவந்தா ளயலான்பின் சென்று
ளதரஞ் சிவந்தா ளலளா—லுதர
மடித்தழும்பா விக்கா மனன்மீட் டருள்வாய்
முடித்தழும்பா விக்கா மூனம். (சஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மூன்னியயா வுந்தநவாட் போக்கிநா யகவடியேன் மொழி
தபாடன், மன்னியகுற் றமுந்தணமாக் கொண்டுமெகிழ்ந் தரு
ள்புரிகி மறுப்பா யென்னிற், றுன்னியவூ. ரினும்விளைசார்
தறியாத புல்லெருக் தஞ் சூடிக் கொண்டாய், மன்னியமற்ற
தன்குணமென் னெனில்விடைநீ கொடுக்குமா வருங்கண்டா
யே. (சுகூ

நேரிசைவெண்பா.

ஏற்றர்வாட் போக்கி யிராசலிங்கர் கூற்றினுக்கோர்
கூற்றர் சுரும்பார் குழல்பாகர்—நீற்றரொமை
நன்றுடல் கண்டோ நபவாமை வேண்டியவர்
மன்றுடல் கண்டோமம் மா. (௧00)

வாட்போக்கிக்கலம்பகம்-முற்றிற்று.

இராசலிங்கர்துணை.

சுரும்பார்குழலம்மைதுணை.